*9*

# இழந்து போகப்பட்டுள்ளவர்களை அடைதலில் ஒரு உதாரணம் தேவைப்பட்ட ஒரு சபை

## (1 கொரிந்தியர் 9:1–27)

1964ல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபராவதற்கு குடியரசுக் கட்சியின் சார்பில், பார்ரி கோல்டு வாட்டர் அவர்கள் வேட்பாளராக முன்மொழியப்பட்டபோது, அவர் "விடுதலையின் பாதுகாப்பில் தீவிரவாதம் என்பது குற்றமல்ல . . . (மற்றும்) நீதியின் தேடுதலில் மிதவாதம் என்பது நெறிமுறையானதும் அல்ல என்று கூறினார்."[1] வாக்காளர்கள் இணங்க வைக்கப் படவில்லை. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு அணுக்கருப் போரைத் தொடங்குவாரோ என்று பலர் அச்சம் கொண்டனர். இதன் விளைவாக அவர் லின்டன் ஜான்ஸன் அவர்களிடம் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

தீவிரவாதம் என்பது நெறிமுறையாக இருக்கும் காலங்கள் உள்ளனவா? 1 கொரிந்தியர் 8:13ல் பவுல், "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்" என்று எழுதினார். அவைகள் இன்றைய நாட்களில் பலருக்குத் தீவிரவாதியின் வார்த்தைகளாக ஒலிக்கின்றன!

கர்த்தருக்கு ஊழியம் செய்யும் பகுதிகளில், அவருக்காகத் தீவிரமாகச் செல்லும் பவுலின் உதாரணத்தை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று பவுல் விரும்பினார் (1 கொரிந்தியர் 10:33; 11:1; காண்க 4:16). விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைக் குறித்து, கொரிந்தியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் முதலில் கூறினார் (அதிகாரம் 8). பின்பு அவர், சபையில் பிரச்சனைகள் எழும்போது அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு, ஒரு உதாரணத்தை - தமது சொந்த உதாரணத்தை - அவர்களுக்கு அளிக்கச் சென்றார் (அதிகாரம் 9).[2] பவுல் மற்றவர்களை இரட்சிப்பதற்கும் தம்மைத் தாமே இரட்சிப்பதற்கும், தீவிரவாத செயல்களை மேற்கொள்ள மனவிருப்பமாக இருந்தார் என்பதை அவரது உதாரணம் செயல்விளக்கப் படுத்துகிறது. இந்த உதாரணம், இதையே செய்யும்படி நமக்கு அறைகூவல் விடுக்கிறது.

## பவுலின் உதாரணம்

பவுல் தம்மையும் மற்றவர்களையும் இரட்சிப்பதற்கு எவ்வளவு தூரம் செல்லுவார்? முதலாவது, அவர் மற்றவர்களை இரட்சிப்பதற்கு என்ன செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தார் என்பதைக் கவனிப்போமாக (9:1-18).

**மற்றவர்களை இரட்சிக்கப் பவுல் என்ன செய்தார்**

இவ்வசனப் பகுதியில் பவுல், மற்றவர்களை இரட்சிப்பிற்குக் கொண்டுவரத் தாம் எந்த அளவுக்குச் செல்ல மனவிருப்பம் கொண்டிருந்தார் என்பதை விவரித்தார். அடிப்படையில் அவர், தமது ஊழியத்தில் தம்மை அதிகம் செயல்விளைவுள்ளதாக்கும் என்றால், தமது உரிமைகளை விட்டுக் கொடுக்க மனவிருப்பம் கொண்டிருந்தார்.

*தாம் யாராக இருந்தார் என்பதைப் பற்றிய ஒரு நினைவூட்டுதல்* (9:1, 2). பவுல் தமது உரிமைகளைச் சரணடையச் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்ததைக் கிறிஸ்தவர்கள் மதித்தலை நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பினார், எனவே அவர் தாம் உரிமைகளைக் கொண்டிருந்தது ஏன் என்பதை விளக்கப் படுத்தினார். அவர் கர்த்தரைக் கண்டிருந்ததால்,[3] தாம் ஒரு அப்போஸ்தலராக இருந்தார்[4] என்பதை வலியுறுத்தினார் மற்றும் அவர்கள் தொடர்ந்து இன்னும் கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்பது தமது அப்போஸ்தலத்துவத்தை நிரூபித்தது என்றும் அவர் கூறினார் (9:1). அவர்களைப் போலவே அவரும் சுயாதீனராக இருந்தார் என்பதை சுட்டிக்காட்டினார் (9:1), உண்மையில் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் சுயாதீனத்தை மகிழ்வுடன் அனுபவித்தனர் என்றால் அவர் ஒரு அப்போஸ்தலர் என்ற வகையில் தாம் விரும்பியவற்றைச் செய்வதற்கு எவ்வளவு அதிகம் சுயாதீனம் உள்ளவர் என்று உரிமைகோர இயலும்![5]

*அவர் செய்திருந்தவை என்ன என்பதைப் பற்றிய ஒரு நினைவூட்டுதல்.* பவுல் யாராக இருந்தார் என்பதைக் கொரிந்தியர்களுக்கு நினைவூட்டியபின்பு, அவர்கள் மத்தியில் தாம் செய்திருந்தவற்றைப் பற்றி அவர்களின் மனதிற்கு அழைப்பு விடுத்தார். பவுல் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, எண்ணற்ற உரிமைகளை விட்டுக்கொடுத்திருந்தார்.

(1) உண்பதற்கும் குடிப்பதற்குமான உரிமை (9:3, 4). விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றைப் புசிக்கக் கிறிஸ்தவர்கள் உரிமைகொண்டிருந்தாலும், அவர்கள் தங்களது பலவீனமான சகோதரர்கள் நிமித்தம் அதை விட்டுக்கொடுக்க மனவிருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் முன்னதாக வலியுறுத்தி இருந்தார் (8:7-12). ஏற்கனவே அவர் மாம்சம் புசிப்பதற்கான தமது உரிமையை விட்டுக்கொடுக்கத் தமது மனவிருப்பத்தை வெளிப்படுத்தி இருந்தார் (8:13).[6]

(2) திருமணமாகி இருப்பதற்கான உரிமை (9:5). பேதுரு (கேபாஸ்),[7] மற்ற சில அப்போஸ்தலர்கள் மற்றும் இயேசுவின் சகோதரர்கள் ஆகியோரைப் போன்றே, பவுலும் திருமணமாகி இருப்பதற்கான உரிமையைக் கொண்டிருந்தார்.[8] இருப்பினும் அவர் அந்த உரிமையைப் பயன்படுத்தாதிருப்பதைத் தேர்ந்துகொண்டிருந்தார் (அதிகாரம் 7).

(3) ஊதியம் பெற்றுக்கொள்வதற்கான உரிமை (9:6-18). மேலும் பவுல், தாம் பிரசங்கித்த சபையினால் உதவி அளிக்கப்படும் உரிமையைத் தாம் கொண்டிருந்ததாகவும் உறுதிப்படுத்தினார். உண்மையில் இதுவே இந்தப் பகுதியின்

முதன்மைத் தலைப்பாக உள்ளது. இது ஏன் என்று நாம் வியப்படையலாம். ஒருவேளை பவுல், கொரிந்து சபையில் தமது பிரயாசங்களின்போது, அவர்களிடம் இருந்து நிதிகளை ஏற்றுக்கொள்ளாததற்காக விமர்சிக்கப் பட்டிருக்கலாம். உண்மையான அப்போஸ்தலர்கள் ஊதியத்தை ஏற்றுக்கொண்டனர், எனவே பவுல் தமது பிரசங்கித்தலுக்கு ஊதியம் பெற்றுக்கொள்ள மறுத்தார் என்பது, அவர் உண்மையான அப்போஸ்தலராக இருக்கவில்லை என்று அர்த்தப்படுத்தி இருக்க வேண்டும் என்று சிலர் நினைத்திருக்கலாம்.[9]

பவுல், தாம் ஊதியம் அளிக்கப்படும் உரிமையைக் கொண்டிருந்ததாகப் பலமாக விவாதித்தார். அவர் ஒரு அப்போஸ்தலராக இருந்தபடியால், மற்ற அப்போஸ்தலர்கள் செய்தது போன்றே, ஊதியம் பெற்றுக்கொள்ளத் தகுதியானவராகவே இருந்தார் (9:3-6). தங்கள் வேலையில் இருந்து பயன் பெற்ற மக்கள் பற்றிய சாதாரண உதாரணங்களைப் பயன்படுத்தியதன் மூலம் அவர்களின் பொது அறிவிற்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்: போர்வீரர்கள், விவசாயிகள் மற்றும் மந்தை மேய்ப்பவர்கள் (9:7, 8அ). பின்பு அவர், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர் தமது பிரசங்கித்தலில் இருந்து தமது வாழ்க்கைக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை, மோசேயின் நியாயப்பிரமாணம் ஆதரித்தது என்று காண்பித்தார். போரடிக்கும் மாடு தானியத்தை உண்ணாதபடிக்கு அதன் வாயைக் கட்டக்கூடாது என்று நியாயப்பிரமாணம் போதித்தது,[10] மற்றும் அந்த அறிவுறுத்துதல்கள் உண்மையில், கிறிஸ்தவ யுகத்தில் தேவனுடைய மக்களின் பயனுக்காகவே எழுதப்பட்டிருந்தன என்று பவுல் கூறினார் (9:8ஆ-10அ). மீண்டும் அவர் பின்வரும் ஒப்புவமையில் இருந்து விவாதித்தார்: விதைக்கிற விவசாயிகள் பயிரை அறுவடை செய்தலை எதிர்பார்ப்பது போன்றே, ஆவிக்குரிய விதைகளை விதைத்துள்ள பிரசங்கியார்கள் தங்கள் ஊழியத்தில் இருந்து பொருள் ஆதாயங்களை அறுவடை செய்ய வேண்டும் (9:10ஆ, 11). அடுத்ததாக அவர், ஆசாரியர்களும் லேவியர்களும் தேவாலயத்தில் நிகழ்த்திய ஊழியங்களில் இருந்து பயன் அடைவது அவர்களின் உரிமையாக இருந்தது என்று காண்பிக்க, நியாயப்பிரமாணத்திடம் திரும்பினார் (9:13). இந்தப் பாடக்கருத்தின்மீது அவர் கூறியுள்ள யாவற்றையும் பின்வரும் முடிவு வாக்கியத்தில் அவர் தொகுத்துரைத்தார்: "அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (9:14). அந்தக் கூற்று இந்தப் பிரச்சனையை என்றென்றைக்குமாகத் தீர்த்து வைக்கிறது. பிரசங்கிப்பவர்கள் ஊதியம் பெறும் உரிமையைக் கொண்டுள்ளனர்.[11]

பவுல் ஊதியம் பெற்றுக்கொள்ளும் உரிமையைக் கொண்டிருந்தாலும், அந்த உரிமையை அவர் அனுகூலப்படுத்திக் கொள்ளாதிருந்தார். அவர், "மற்றவர்கள் உங்களிடத்திலே [உங்களால் ஊதியம் அளிக்கப்படும் உரிமையென்ற] இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம்" என்று கூறினார் (9:12அ; மேலும் காண்க 9:15). ஏன் அவர் இதைச் செய்யவில்லை? (1) ஏனென்றால் அவர் ஊதியம் பெற்றுக்கொள்ளுதல் என்ற விஷயம் சிலருக்கு இடர்ப்பாடாக இருக்கலாம் (9:12ஆ) மற்றும் (2) ஏனென்றால் பிரசங்கித்தலுக்குப் பவுல் மற்ற

நோக்கங்களைக் கொண்டிருந்தார் (9:15-18, 22).

*அவர் ஏன் இதைச் செய்தார் என்பது பற்றிய ஒரு நினைவூட்டுதல்.* பவுல் பணத்திற்காகப் பிரசங்கிக்கவில்லை, ஆனால் அதைச் செய்ய வேண்டியிருந்ததால் அவர் அவ்வாறு பிரசங்கித்தார்; அவர் "கட்டாயத்தின்கீழ்" இருந்தார். அவர் "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" என்று கூறினார் (9:16). பிரசங்கிக்கும்படி அவரைத் தேவன் அழைத்திருந்தார், எனவே அவர் பிரசங்கிக்க வேண்டியிருந்தது! ஒரு சபைக்குழுமத்திடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுதலுக்கு மாறாக, அவர் தமது உக்கிராணத்துவத்தை நிறைவேற்றுதல் என்பதே அவரது பலனாக இருந்தது.[12]

மற்றும் பவுல், பிரசங்கித்தலுக்கான தமது நோக்கத்தை 9:19-23ல் விளக்கப்படுத்தினார்.[13] மக்களை இரட்சித்தல் என்பதே அவர் தமது உரிமைகளை விட்டுக்கொடுத்ததற்கான காரணமாக இருந்தது. அந்தக் கருத்தை அவர் இவ்வசனப் பகுதியில் திரும்பத் திரும்ப ஏற்படுத்தினார்: ஐந்து வசனங்களில் ஆறுமுறைகள் அவர், சிலரை ஆதாயப்படுத்துதல் அல்லது இரட்சித்துக் கொள்ளுதல் என்பதைப் பற்றிப் பேசினார். பவுலின் மன ஈர்ப்பு பற்றிய மிகவும் தீவிரவாதமான கூற்று 9:22ல் உள்ளது: "எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்." பவுல் தமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மனவிருப்பமாக இருந்தார். அவ்வாறு செய்தலின் மூலம் அவர் சிலரை இரட்சிப்பிற்குள் கொண்டுவர முடியும்!

### பவுல் தம்மை இரட்சித்துக்கொள்ள என்ன செய்தார்

பவுல், தாம் இரட்சிக்கப்பட்டு இருத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மிகவும் முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டார் (9:24-27). இவ்வசனப் பகுதியில் விளையாட்டு உருவக உவமைகள் இரண்டை அப்போஸ்தலர் பயன்படுத்தினார்: ஓட்டப்பந்தயம் மற்றும் மல்யுத்தம். இந்த விளையாட்டுகளில் மேன்மையடைந்தவர்கள் கடினமாக உழைக்க வேண்டியிருந்ததை அவர் சுட்டிக் காண்பித்தார்; அவர்கள் பெருமளவில் சுயகட்டுப்பாட்டைச் செயல்படுத்தி தங்கள் குறிக்கோள்களில் கவனமான நோக்கத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தேர்ந்த ஒரு விளையாட்டு வீரரைப் போல பவுல் தமது குறிக்கோளின்மீது கவனம் குவித்ததாகக் கூறினார். அவர் "இலக்கின்றி" ஓடவில்லை, ஆனால் வெற்றி பெறும்படியாகவே ஓடினார்! அவர் "காற்றில் அடிக்கிற" ஒருவரைப் போன்றல்ல, ஆனால் தமது இலக்கைத் தாக்கும் வகையில் மல்யுத்தம் பண்ணினார். அவர் சுயகட்டுப்பாட்டையும் செயல்படுத்தினார். உண்மையில் அவர் தமது சரீரத்தைத் தமக்கு அடிமையாக்கும்படி அதை ஒழுங்குக்கு உட்படுத்தியதாக - நேர்ப்பொருளில் அவர் தமது சரீரத்துடன் "போராடினார்" அல்லது அதை "அடித்தார்" - என்று கூறினார். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் மூலமாக மற்றவர்களை இரட்சிப்பிற்குக் கொண்டுவந்த பின்பு அவர் இழந்துபோகப் பட்டிராதபடி அல்லது "தகுதியற்றுப்போய்விடாதபடி" இவற்றைச் செய்தார்.

இந்த விவரிப்பானது, ஒரு விளையாட்டு வீரர் பல ஆண்டுகள் பயிற்சிக்குப் பின்பு ஒலிம்பிக் விளையாட்டுகளில் போட்டியிட்டு வெற்றி பெறுதலை நாம் நினைக்கும்படி செய்கிறது. பவுல், தாம் நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி, கடினமாக உழைக்கவும் தியாகம் செய்யவும் மனவிருப்பமாக இருந்ததாகக் கூறினார்.

## நமது பதில்செயல்

*பவுல் தம்மையும் மற்றவர்களையும் இரட்சித்துக் கொள்வதற்கு மாபெரும் தூரங்கள் சென்றார் என்பதைக் கண்டிருக்கிறோம். மற்றவர்களையும் நம்மையும் இரட்சித்துக் கொள்வதற்கு நாம் எவ்வளவு தூரம் செல்ல மனவிருப்பமாக இருக்கிறோம்?*

***மற்றவர்களை இரட்சிப்பதற்கு நீங்கள் எவ்வளவு தூரம் செல்வீர்கள்?***

*மற்றவர்களை இரட்சிப்பதற்கு நாம், 9:22ஆ வசனப் பகுதியில் - "சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்ற - பவுலின் உதாரணத்தைப் பின்பற்ற மனவிருப்பமாக இருக்க வேண்டும். பல கிறிஸ்தவர்கள் தங்கள் தியாகம் நிறைந்த வாழ்வினால், மற்றவர்கள் இரட்சிக்கப்பட நற்செய்தியைப் பரப்புவதற்கான தங்கள் தீர்மானத்தைச் செயல்விளக்கப் படுத்தியுள்ளனர். தூரத்தில் உள்ள நாடுகளில் இருக்கும் மக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்காக, சில ஆண்களும் பெண்களும் தங்கள் சொந்த நாடுகளில், தங்கள் சொந்தக் குடும்பங்களுக்கு அண்மையில் இருக்கும் வசதியான வாழ்வை விட்டுக்கொடுத்துள்ளனர். மற்றவர்கள், புதிய அல்லது போராடும் சபைக்குழுமங்களுக்கு உதவுவதற்காக, தங்கள் சொந்த செலவில், ஒவ்வொரு ஞாயிறு அன்றும் பல மைல்கள் பிரயாணம் செய்வதற்கு, தங்கள் உள்ளூர் சபைக்குழுமங்களில் ஆராதிக்கும் சந்தோஷத்தைத் தியாகம் செய்துள்ளனர். சிலர், இழந்துபோகப்பட்டுள்ளவர்கள் இருக்கும் அந்நிய நாடுகளில் முகாம் இடுவதற்காகச் செல்கின்றனர் அல்லது வீட்டு வேதாகமப் படிப்புகளில் மற்றவர்களுக்குப் போதிப்பதற்காகத் தங்கள் குடும்பங்களுடன் ஓய்வாக இருக்கும் மாலை நேரங்களைத் தியாகம் செய்துள்ளனர்.*

*இப்படிப்பட்ட மக்கள், தீவிரவாதிகளாக அல்லது மட்டுமீறிய உணர்வெழுச்சி கொண்டவர்களாகக் கண்ணோக்கப் படலாம் - ஆனால் அவர்கள் பவுலின் தீவிரவாத உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர் என்று நாம் கூறலாம். சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்ற மாபெரும் சிலாக்கியத்திற்காக, ஒன்றிரண்டு உரிமைகளைத் துறந்து விடுதல் என்பது ஒரு சிறிய விலையாகவே உள்ளது.*

***உங்களை இரட்சித்துக்கொள்ள நீங்கள் எவ்வளவு தூரம் செல்வீர்கள்?***

*நம்மை இரட்சித்துக் கொள்வதற்கு நாம், 9:24-27ல் பவுலின் உதாரணத்தைப் பின்பற்ற மனவிருப்பமாக இருக்க வேண்டும்: ஒரு கிறிஸ்தவராக இருத்தலில் கடினமாக உழைத்தல், கிறிஸ்தவ ஓட்டத்தை ஊக்கத்துடன் ஓடுதல், அதில் வெற்றிபெறும் மனவிருப்பத்துடன் ஓடுதல்; கிறிஸ்தவ யுத்தத்தைத் தீவிரமாகப் போராடுதல், நமது எதிராளியான பிசாசின்மீது முழுக்கவனத்துடன் இலக்கு வைத்தல். நாம் வழுக்கி விழாதபடிக்கு அல்லது விழுந்து போகாதபடிக்கு, நமது சரீரங்களை அடக்கி, பாவம்நிறைந்த விருப்பங்களைத் தொடர்ந்து எதிர்த்து நிற்க வேண்டும். ஒரு ஒலிம்பிக் ஓட்டப் பந்தய வீரர், வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கையுடன் போட்டியில் பங்கேற்பது போன்று, நாம் நமது நித்திய இரட்சிப்பைக் குறித்துத் தீவிரமாக இருக்கிறோமா? நாம் நமது இரட்சிப்பைப் பற்றித் தீவிரமாக இருந்தால், ஆவிக்குரிய வகையில் பலமாக வளருவதற்கு நாம் முயற்சியை மேற்கொள்வோம் மற்றும் - வேதாகமப் படிப்பு மற்றும் ஜெபம் ஆகியவற்றில் - பயிற்சிக்குத் தேவையான நேரத்தைச் செலவிடுவோம்.*

*இந்த விஷயங்கள் யாவற்றையும் செய்கிற எவரொருவரும் மட்டுமீறிய உணர்ச்சி ஆர்வம் கொண்டவர் என்று நினைக்கப்படலாம். இருப்பினும் இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்யத் தவறுகிற எந்தக் கிறிஸ்தவரும் - ஒரு ஓட்டப்பந்தய வீரர் தமது விளையாட்டைத் தீவிரமாக நினைத்துச் செயல்படுவது போல, தமது சொந்த இரட்சிப்பைப் பற்றித் தீவிரமாக இராத எந்தக் கிறிஸ்தவரும் - தமது ஆத்துமாவை இழந்துபோகும் அபாயத்தில் இருக்கிறார்! மாற்று செயல்கள் இரண்டில் ஒன்றை நாம் தேர்ந்தெடுத்தாக வேண்டும்: நமது நித்திய இரட்சிப்பைப் பற்றித் தீவிரமாக இருத்தல் அல்லது (நித்திய இரட்சிப்பை) இழந்து போகுதல்!*

## *முடிவுரை*

*தீவிரவாதம் என்பது ஒரு நெறிமுறையாக மற்றும் குற்றம் இல்லை என்பதாக இருக்கும் வேளை எப்போதாவது உள்ளதா என்று கேட்டு நாம் இந்தப் பாடத்தைத் தொடங்கினோம். பின்பு நாம், பவுலின் வார்த்தைகள், பலர் அவரைத் தீவிரவாதி என்று வகைப்படுத்தக் காரணமாயின என்பதைச் செயல்விளக்கப் படுத்தினோம். அவர் தம்மையும் பிறரையும் இரட்சித்துக் கொள்வதற்கு வெகுதூரங்கள் சென்றார்.*

*மேலும் பவுல், தம்மைப்போன்றே மற்ற கிறிஸ்தவர்களும் இருக்க வேண்டும் என்று விரும்பினார்! ஆகையால் நாம், "மற்றவர்களை இரட்சிப்பதற்கு மற்றும் நம்மை இரட்சித்துக் கொள்வதற்கு, நாம் எவ்வளவு தூரம் - எந்த மிகையளவு தூரம் - செல்லுவோம்?" என்று கேட்டோம்.*

*இப்போது நாம், "தீவிரவாதம் ஒரு நெறிமுறையாக இருப்பது எப்போது?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறோம். "நமது ஆத்துமாக்கள் இடர்ப்பாட்டில் இருக்கும்போது" என்பதே பதிலாக உள்ளது. நமது நடத்தையானது யாரேனும் ஒருவருடைய ஆத்துமாவின் நித்திய அடைவிடம் பற்றிய விஷயத்தின்மீது செயல்விளைவு ஏற்படுத்தும்போது, தீவிரவாத நடத்தையானது நியாயப்படுத்தப் படுகிறது - அது தேவையாகவும்கூட உள்ளது.*

---

*குறிப்புகள்*

[1]Gary Donaldson, ed., *Modern America: A Documentary History of the Nation Since 1945* (New York: M. E. Sharpe, 2007), 151. [2]*"கொரிந்தியர் விசுவாசிகள் மத்தியில் இருந்த இந்த, அறிவைத் தவறாகப் பயன்படுத்தியவர்களுக்கு அவர்களின் பலவீனமான சகோதரர்களுக்குப் பணிவிணக்கம் காட்டும்படிப் பவுல் அறிவுறுத்தியபின்பு, பவுல் தமது சொந்த வாழ்வில் இருந்து மற்றவர்களுக்கு, இந்த வேறுபாட்டின் கொள்கையைச் செயல்விளக்கப்படுத்துதல் அவசியமாயிருக்கும் என்று உணர்ந்தறிந்தார்"* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 203). [3]*இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் உள்ள கேள்விகள், சொல்லாடல் கலைக் கேள்விகளாக உள்ளன; இவைகள் நேர்மறையாகப் பதில் அளிக்கப்பட வேண்டும் என்பதை யூகித்தவைகளாக இருக்கின்றன.* [4]*அப்போஸ்தலராக இருக்க வேண்டும் என்றால், ஒருவர் உயிர்த்தெழுந்த கர்த்தரைத் தரிசித்து இருக்க வேண்டும்; தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் கிறிஸ்து பவுலுக்குத் தரிசனமாகி இந்தத் தகுதியை நிறைவுசெய்தார்*

*(நடபடிகள் 9:3-5, 27; காண்க 1:21, 22; 2:32; 26:16-18; 1 கொரிந்தியர் 15:8).* [5]*பவுல் ஒரு அப்போஸ்தலராக இருந்தார் என்ற அவரது கூற்றும், தம்மை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு ஒரு "தற்காப்புவாதத்தை" ஏற்படுத்தும் அவரது பேச்சும் (9:3), கொரிந்து சபையில் இருந்தவர்களில் சிலர் பவுலின் அப்போஸ்தலத்துவம் மற்றும்/அல்லது அதிகாரத்துவம் பற்றிக் கேள்வி எழுப்பினர் என்று கருத்துத் தெரிவிக்கிறது (மேலும் காண்க - 1 கொரிந்தியர் 4:3-16). இருப்பினும் 1 கொரிந்தியர் 9ல் பவுல் தமது அப்போஸ்தலத்துவத்தைத் தற்காத்துக் கொள்ளுதல் என்பது அல்ல, ஆனால் கொரிந்தியர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கும் வகையில் தாம் விட்டுக்கொடுத்தவை என்ன என்பதை வலியுறுத்துதலே முதன்மை அக்கறையாக இருந்தது.* [6]*பவுல் தாம் "புசிக்கவும் குடிக்கவும்" உரிமை கொண்டிருந்தார் என்ற அவரது உரிமை கோருதலானது, அவர் வலியுறுத்தச் செல்ல இருந்தவற்றைப் பற்றிக்கூறும் வேறுபட்ட வழியாக இருக்கும் இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது: அவர் வாழ்வின் தேவைகளைக் கொண்டிருக்கக் கூடும்படிக்கு உதவி அளிக்கப்படும் உரிமை கொண்டிருந்தார் - எனவே அவர் "புசித்து குடிக்கலாம்."* (Oster, 206.) [7]"To take along a believing wife" *என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க சொற்றொடர், "மனைவியாகிய ஒரு சகோதரி"யை உடன் அழைத்துச் செல்லுதல் என்று அர்த்தப்படுகிறது. (இது தமிழ் வேதாகமத்தில், "மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டுதிரிய" என்று சரியாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.) "சகோதரி" என்பது சக கிறிஸ்தவப் பெண் ஒருத்தியைக் குறிப்பிடுவதற்கு உருவக நடையில் பயன்படுத்தப் பட்டுள்ளது; ஆகையால், "விசுவாசம் உள்ள ஒரு மனைவி" என்பதே மூலமொழியின் அர்த்தத்தை மிகச்சரியாகப் பிரதிபலிக்கிறது.* (Ibid., 208.) [8]*பேதுரு திருமணம் செய்துகொண்டிருந்தார். அவர்தாம் முதல் போப் என்று சிலர் நம்புகின்றனர், இருப்பினும் ரோமன் கத்தோலிக்க சபையின் குருக்கள் (மற்றும் ஆயர்கள் மற்றும் போப்புகள் ஆகியோர்) திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. அதுபோன்றே சுவிசேஷப் புத்தகங்களும், பேதுரு ஒரு மனைவியைக் கொண்டிருந்தார் என்று போதிக்கின்றன, ஏனெனில் அவருக்கு ஒரு மாமியார் இருந்ததாக அவைகள் உரைக்கின்றன (மாற்கு 1:29-31).* [9]*அப்போதும் இப்போதும் சில விஷயங்கள் அதன் விலைக்குத் தகுதியானதாக இருந்தது என்று சில மக்கள் நினைத்தனர். ஒருவேளை அவர்கள், பவுல் இலவசமாகப் பிரசங்கித்ததால், அவரது பிரசங்கித்தல், எதற்கும் தகுதியற்றதாக இருந்தது மற்றும் அவர்தாமே, ஒரு பிரசங்கியார், போதகர் அல்லது நடத்துனர் என்ற வகையில் கொஞ்சம் மதிப்பையே கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்து இருக்கலாம்.* [10]*உபாகமம் 25:4.*

[11]*இதே சத்தியம் மத்தேயு 10:10 மற்றும் லூக்கா 10:8 ஆகிய வசனங்களில் போதிக்கப் பட்டுள்ளது.* [12]*பிரசங்கித்தலுக்கு ஊதியம் பெற்றுக்கொள்ளாது இருத்தல் என்ற பவுலின் கொள்கையானது, அந்த வேளையில் அவர் ஊழியம் செய்துகொண்டிருந்த சபைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது என்பது உறுதி. அவர் ஊழியப்பணிகளைச் செய்யச் சென்று கொண்டிருந்த பிற சபைகளிடத்தில் அவர் உதவி பெற்றிருந்தார் (உதாரணமாக, காண்க - பிலிப்பியர் 4:15-17). அவர் கொரிந்து நகரில் பிரசங்கித்தபோதுகூட, அவர் மற்ற சபைகளிடத்தில் இருந்து உதவி பெற்றார் (2 கொரிந்தியர் 11:7-9). மேலும் பவுல், தாம் எபேசுவில் ஊழியம் செய்கையில் தம்மைதாமே கவனித்துக்கொண்டிருந்ததையும் எபேசியர்களுக்கு நினைவூட்டினார் (நடபடிகள் 18:1-5; 20:33-35).* [13]*20 மற்றும் 21 ஆகிய வசனங்களில் மூன்று பிரிவினர் குறிப்பிடப் பட்டுள்ளனர்: "யூதர்கள்," "நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள்" மற்றும் "பிரமாணம் இல்லாது இருந்தவர்கள்." "பிரமாணம் இல்லாது இருந்தவர்கள்" என்பது புறஜாதியாரைக் குறித்தது என்பது தெளிவு. "யூதர்கள்" என்பவர்கள் "பிரமாணத்தின் கீழ் இருந்தவர்களில்" இருந்து எவ்வாறு*

*வித்தியாசப் படுத்தப் பட்டனர் என்பது பற்றி விளக்கவுரையாளர்கள் நிச்சயமான கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. அனேகமாக, "யூதர்கள்" என்பது இனத்தினால் யூதர்களாக இருந்தவர்களை (அவர்களின் மத்தியில் மோசேயின் பிரமாணத்தை அல்லது ரபீத்துவப் பாரம்பரியங்களைக் கவனமாகக் கடைப்பிடிக்காமல் பலர் இருந்திருப்பார்கள்) அர்த்தப்படுத்தும் வேளையில், "நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள்" என்பது யூதமார்க்கத்தில் இருந்து பிரமாணத்தையும் பாரம்பரியங்களையும் கவனமாகக் கடைப்பிடித்தவர்களை அர்த்தப்படுத்தியது என்று கூறலாம்.* (Oster, 221.)